# தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 6–4–57 | சனிக்கிழமை | இதழ் 29


## காஞ்சியும் மாம்பலமும்!

ஜனவரித் திங்களுக்குப் பிறகு, காங்கிரசார் மகிழத்தக்க வகையில் எத்தனையோ சம்பவங்கள் நடந்தன. எதிர்பாராத இடங்களிலெல்லாம், எதிர்ச் சக்திகளின் பிளவினால் காங்கிரசுக்கு அபரிமிதமான வெற்றி கிடைத்தது. காமராசருக்கு வெற்றி! சக்கனுக்கு வெற்றி! ராமசாமிப் படையாச்சிக்கு வெற்றி! ராமதூதர் பக்தவத்சலத்திற்கும் வெற்றி! - இப்படி எத்தனை வெற்றிகள் கிடைத்தாலும், அந்த வெற்றிகளைப் பற்றி காங்கிரசார் யாரும் மகிழ்வு கொண்டு பூரித்திருக்கவில்லை. பத்திரிகைகளில், காங்கிரசுக்குக் கிடைத்த வெற்றிச் செய்தியைப் படிப்பதைக் காட்டிலும் இன்னொரு செய்தியைப் பற்றியே அவர்கள் செய்தித்தாள்களில் தேடிக்கொண்டிருந்தார்கள். "ஆச்சாரியார் அண்ணாத்துரையைச் சந்தித்தாராமே! ஐயய்யோ! என்ன நேருமோ தெரியவில்லையே! இவ்வளவு தெகிடுதத்தங்கள் செய்து நாம் தேர்தலிலே வெற்றி பெற்றுக்கூடப் பிரயோஜனமில்லையே" என்று அஞ்சி அஞ்சிச் சாவதிலேயே குட்டிக் காங்கிரஸ்காரர்களிலிருந்து, குன்றின்மீதிருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் வரை பொழுதைப் போக்கினார்கள்.

ஒரு சில தீர்க்கதரிசிகள், பெரியாரை ராஜாஜி சந்தித்ததாலே தான் கன்னி புகுந்தாள், கழகம் பிரிந்தது. இப்போது அண்ணாதுரையையும் ராஜாஜி சந்தித்துவிட்டார். இனி தி.மு.க.வும் அப்படி அப்படித் தான்" என்று பெருமிதம் கொண்டு அலைந்தார்கள்.

இன்னும் சிலர் சொன்னார்கள், 'பெரியார் காமராசரை நாடிப் போய் விட்டார். அதனால் தான் ஆச்சாரியார் அண்ணாத்துரையைத் தேடிப் போய் விட்டார். இந்த வயதானவர்களே இப்படித்தான்' என்று 'வியாக்யானம்' புரிந்தார்கள்.

—இப்படி தமிழ் நாடெங்கும் இதைப் பற்றியே பேசிக் கொள்ளப்பட்டது. அதனால் தான் 'காங்கிரசின் வெற்றிப் பணி' ஆடிக் காற்று இலவம் பஞ்சாகியது. வழக்கம் போல் அண்ணா அவர்கள் 'அவர்கள் சந்திப்பை'ப்பற்றி வெளியிடாதிருந்தார்கள். 'சந்திப்பு' மக்கள் பிரச்சினையாக வளர்ந்து ஆவல் பூத்து மலர்ந்த பிறகு அண்ணா அவர்கள் அந்த ரகசியத்தை உடைத்தெறியத் தலைப்பட்டார்கள். அண்ணா அவர்கள் கருத்துரை வழங்கிய பிறகுதான் ஆச்சாரியார் என்ன நோக்கத்துடன் அண்ணாவைச் சந்தித்துப் பேசினார் என்று புரிந்தது. வடநாடு - தென்னாடு, ஆரிய திராவிடப் பிரச்சினை இரண்டையும் விட்டுவிட்டால் திராவிடத்தைக் காப்போம் என்கிறார்கள் புதிய உறவு கொண்டவர்கள். இதற்கு அண்ணா அவர்கள் பதில் சொல்லுகையில் 'நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகம்' என்றுதான் வைத்திருக்கிறோமே அல்லாது 'திராவிடர் முன்னேற்றக் கழகமல்ல' என்று விளக்கியிருக்கிறார். தென்னாட்டின் நலத்திலே அக்கறை செலுத்தும் கட்சி என்பதுதான் அண்ணாவின் சொல்லுக்குப் பொருளென்றாலும், அந்தப் பொருளைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்வோருமுண்டு. 'திராவிடம் என்றால் தென்னாடுதான்; அந்தத் தென்னாடு முன்னேற்றமடைவதிலே யாருக்குத் தான் அக்கறை இருக்காது" என்று சிலர் 'தர்ம உபதேசம்' செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள். அந்த முன்னேற்றத்தையல்ல நாம் எதிர் பார்ப்பது. அத்தகைய முன்னேற்றத்தை ஆச்சாரியார் வெகு எளிதில் செய்துவிடுவார்! பண்டித நேருவுக்கு ஒரு அவசரத் தபால் எழுதுவார். "நேருஜி அவர்களே, தென்னாட்டில் ஒரு கட்சி இருக்கிறது. அந்தக் கட்சி திராவிடம் முன்னேறவேண்டுமென்கிறது. திராவிடம் என்றால் தென்னாடுதான், நீங்கள் ஒன்றும் பயப்படவேண்டாம். வடநாடு அபிவிருத்தியடைந்திருப்பதைப் போல் தென்னாடு அபிவிருத்தியடையவில்லை என்பதே அவர்களது வாதம். ஆகவே இரண்டொரு திட்டங்களை தென்னாட்டுக்கு நிறைவேற்றி வைத்தால் திராவிடம் முன்னேற்றமடைந்து விட்டதாக அவர்கள் கருதிவிடுவார்கள். பிறகு அவர்கள் தொல்லை இராது" என்று குறிப்பிட்டு உடனடியாகக் காரியத்தை நிறைவேற்றி வைக்க ஆச்சாரியாரால் முடியும். அந்த முன்னேற்றமா நாங்கள் விரும்புவதும் அண்ணா கேட்பதும்! அல்லவே! ஆச்சாரியார் தவறாகப் புரிந்து கொண்டாரோ அல்லது நம்மை அந்த வழிக்கு இழுக்கிறாரோ நாம் அறியோம். ஏனென்றால அந்த நோக்கத்தில் தான் 'தென்னாட்டு முன்னேற்றம்' என்ற தலைப்பில் கல்கியில் ஒரு தலையங்கம் வெளியாகியிருந்தது. அவர்களுக்கு நாம் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்வோம்; திராவிடம் என்பது தென்னாடுதான்; அதை நாம் மறுக்கவில்லை. அதன் முன்னேற்றம் என்பது டில்லி நினைத்தால் எளிதிலே நடந்துவிடக்கூடியது என்று கல்கி வட்டாரத்திலே எடை போடுகிறார்கள். அதையல்ல நாம் எதிர்பார்ப்பது! இதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். அதற்கு ஒரு வழி இருக்கிறது; இலகுவான வழி. திராவிடத்தைப் பிடித்திருக்கிற பிணி என்ன என்பதை 'காக்கவரும்' புது நண்பர்கள் தெரிந்து கொண்டு விட்டால் நமது உறவின் எதிர்காலத்தை நம்மால் கணித்துவிட முடியும்.

வேண்டும்போதெல்லாம் ஒரு பிடி சோறு போட்டுவிட்டால் பிச்சைக்காரன் தொல்லை இராது. - அதுதான் திராவிடத்தின் தொல்லை என்று கருதிக் கொண்டு 'திராவிடத்தைக் காக்க' யாரும் வரவேண்டியதில்லை என நாம் தெளிவாகக் கூறிவிடுகிறோம். தாடியும், திருவோடும் அப்படியே தானிருக்கும், வயிற்றுப்பசி மட்டும் தீர்க்கப்படும் என்று கருதியல்ல நாம் முன்னேற்றத்தைதேடியலைவது. பிச்சைக்கார 'உத்தியோக

— 4-ம் பக்கம் —

# புரட்சிக் காதை

க. அறிவழகன், எம்.ஏ.

வரலாறு என்ற எழுத்தாளன் எத்தனை யெத்தனையோ நாடகங்களைத் தீட்டியிருக்கிறான். புதிய புதிய குணாதிசயங் கொண்டோர் அவன் நாடகப் பாத்திரமாக வந்து வந்து போயிருக்கின்றனர். புத்தம் புதிய சூழ்நிலைகளையும், மெத்தவும் ஆச்சரியப்படத்தக்க காட்சிகளையும் அவன் நமக்குக் காட்டியிருக்கிறான். அந்நாடகங்களின் முடிவு துன்பியலானாலும், இன்பியலானாலும் நித்த நித்தம் புதிய நாடகங்களைத் தீட்ட மாத்திரம் அவன் தவறுவதேயில்லை!

போரும் சமாதானமும், பஞ்சமும் பொருள் பெருக்கமும், ஆதிக்கமும் அதனின்று விடுதலையும், மத வளர்ச்சியும் அதன் அழிவும், சர்வாதிகாரமும், ஜனநாயகமும் எந்த வித மாற்றமும், இடம், காலம், சூழ்நிலை இவைகளைப் பொறுத்தே ஏற்படுகின்றன என்பதை அவன் தீட்டுகின்ற நாடகக் கதையமைப்புகள் நமக்குத் தெள்ளத் தெளியக் காட்டுகின்றன.

அந் நாடகத்தில் உணர்ச்சி உந்தும் உச்சநிலைக் காட்சியே புரட்சியாகும். அப்புரட்சிக் காட்சி திடீரென்று வெடித்திடும் எரிமலை போல் தோன்றினாலும், அது வெடிப்பதற்கு எத்தனை யெத்தனை காரணங்கள் அடிப்படையில் உள்ளன என்பதை அறியும்போது மிகவும் ஆச்சரியமாகக் கூட இருக்கும்.

அடிப்படைத் தேவையான உணவு கிடைத்திடாமல், பஞ்சத்தால் மக்கள் பரிதவிக்கும் நிலை ஏற்பட்டபோது புரட்சி ஏற்பட்டிருக்கிறது.

ஆதிக்க வெறியுணர்ச்சி கொண்ட அயல் நாட்டாரின் படையெடுப்பின்போதும், உரிமை உணர்ச்சியால் கிளர்ந்தெழும் மக்களை அடக்குமுறையால் நசுக்கும்போதும் புரட்சி வெடித்திருக்கிறது.

ஒரு கொள்கை, கோட்பாடு, சமயங் கொண்டோர் மற்றோர் கொள்கை, கோட்பாடு கொண்டோர் மீது ஆதிக்கம் செலுத்த முயன்றபோது புரட்சி மூண்டிருக்கிறது.

உணவு ஓரளவு கிடைத்துங்கூட, குடியிருப்புத் தேவையோ போதுமான அளவு உடையோ கிடைக்காததால், கோடையின் வெயிலையும், கடுங் குளிரையும் தாங்கமுடியாத நிலையில் புரட்சி கொப்பளித்ததுண்டு.

ஆட்சியாளர் (அரசர்கள்) மனிதனுடைய இயற்கை உணர்ச்சிகளை பாதிக்கிற முறையில், மனைவி மக்களைத் தூக்கிச் செல்வதும், குடும்பப் பெண்களைத் தங்கள் இரைக்கு ஆளாக்கிக் கொள்ளும்போதும் புரட்சிகள் கிளர்ந்தெழுந்ததுண்டு.

மனிதன் தன்மான உணர்ச்சியைச் சுட்டுச் சாம்பலாக்கும் முறையில், மதத்தின் பேரால், சமுதாய கட்டு திட்டங்களின் பேரால், தாழ்த்தப்பட்டவர்களாக பலரை அழுத்தி வைப்பதாலும், சோம்பேறிகளையும் உஞ்சி விருத்தி செய்வோரையும் உயர்த்தி உயர்த்தி தொழவும், உடலுழைப்பினரை முன்னேற முடியாமல் முடக்கி வைப்பதாலும் புரட்சித்தீ எரியத் தொடங்கியதுண்டு.

“வெங் கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள்” என்று பண்பாடும் வீர மரபினரை அறிவுக்கனல் பரப்பிய பரம்பரையினரை, வாழ்வின் இலக்கணங்களாக வாழ்ந்து வந்தோரை, — அவர்களின் வீர உணர்ச்சி வெளிக்காட்டப்படாமல் அழுத்தி வைக்கப்பட்டதாலோ, அவர்களின பேரறிவு பயன்படுத்தப்படாமல் துருப்பிடிக்க விடப்பட்டதாலோ புரட்சி வெள்ளம் கரை உடைத்துக் கொண்டோடியதுண்டு.

இவை போன்ற இன்னோரன்ன காரணங்கள் பலவும் புரட்சி நாடகத்தின் அடிப்படை அம்சங்களாகும். புரட்சிக் கொடியைக் கையிலேந்துபவர்கள், எங்கேயும் எப்போதும் அழுத்துப்பட்டவர்களாகவே யிருப்பர். பெரும்பாலான மக்களின் அடிப்படை உணர்ச்சி தொடர்ந்து ‘அழுத்தி’ வைக்கப்படுமானால் அது வெடிக்கத்தானே செய்யும்!

‘அடிப்படைத் தேவை’ என்பதின் அளவு, பொதுவாக ‘நிலையும் நினைப்பை’யும் பொருத்தே இருக்கிறது.

ஒரு மனிதனின் திருப்தி, அவனுக்கு இப்பொழுது எவ்வளவு செல்வம் இருக்கிறது என்பதைப் பொருத்தது அல்ல. இதற்கு முன் அவனுக்கு செல்வம் எவ்வளவு இருந்தது என்பதைப் பொருத்தும், அவனைச் சுற்றியுள்ளவர்கட்கு எவ்வளவு செல்வம் இருக்கிறது என்பதைப் பொருத்துமே அமைகிறது.

குழம்பும், சோறும் வயிறாரத் தின்பவன், அறுசுவை உண்டி அருந்துபவனைக் காணும்போது ‘பசி’ உடையவனாகி விடுகிறான்.

நாலு முழ வேட்டியும், உடலைப் போற்றிக்கொள்ள ஒரு துண்டும் உடையவன் நாட்டிலே குறைவாலும், அவற்றை உடையவன் கோட்டும், சூட்டும் அணிந்து, மெருகு குலையாத மோட்டாரில் செல்பவனைக் காணும்போது, வறுமையாளனாகி விடுகிறான்.



இருக்க ஓர் குடிசையிருந்துங் கூட, மாடமாளிகையில் மந்தகாசத்தோடு வாழ்பவனைக் காணும்போது, இவன் ‘ஏதுமற்றவனாக’த் தன்னைக் கருதுகிறான்.

ஆகையால் ‘புரட்சி’ இல்லாமையினால் மாத்திரமல்ல, ஏற்றத்தாழ்வு அதிகமாக இருக்குமானாலும் ஏற்படத்தான் செய்யும்.

தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கையில் கூட அழுத்தி வைக்கப்படுகிற உணர்ச்சிகள் (வாழ்க்கைப் பிரச்சினைகள்) காரணமாக திடீரென்று அவன் தவறான பாதையில் செல்லவும் காரணமாகின்றன.

சிலரிடத்தில் மனிதனின் இத் தனி உணர்ச்சிகள் நல்ல பயன் தரும் எழுத்தாகவும், பேச்சாகவும் தொண்டாகவும் வெளி வருவதுண்டு!

ஆனால் இவ்வுணர்ச்சிகள் பொதுவாக தவறான பாதைக்கே பலரை அழைத்துச் செல்லும்.

ஆனால் தனிப்பட்ட மனிதர்களின் உணர்ச்சி பாதிக்கப்படும்போதெல்லாம் ‘புரட்சி’ ஏற்படும் என்று சொல்ல முடியாது. ஆனால் சமுதாயம் ‘அமைதி’யாக இருக்கிறது என்றும் பொருளல்ல.

ஏறுமாறான பல காரியங்கள் தனிப்பட்ட மனிதர்களால் செய்யப்பட்டு சமுதாயம் குழம்பிய குட்டையாகத்தான் காட்சி தரும்.

அழுத்திவைக்கப்பட்ட உணர்ச்சிகளினால் திருடவே எண்ணியிராதவன் கொள்ளைக்காரனாகிறான்.

‘ஏற்பது இகழ்ச்சி’ என்று வாழ்ந்தவன் திருவோடு ஏந்தி தெருவில் அலைகிறான்.

எதையும் நம்பி வாழ்ந்தவன் எவற்றையும் நம்ப மறுக்கிறான்.

சட்டத்தை மதித்து வாழ்ந்தவன் அதை மிதித்துத் தள்ளுகிறான்.

ஆடம்பரமே வாழ்வாகக் கொண்டவன், தன் ஆடையை விற்பதற்கு வெட்கமின்றி அங்காடிக்கே வந்துவிடுகிறான்.

நாலுபேர் எதிரே உண்பதையே கேவலமாகக் கருதியவன், தெருவில் விழும் எச்சிலைக்கு போட்டிபோடத் தயாராகிவிடுகிறான்.

யாரைக் காணவும், பேசவும் கூசினோன் அவரைப் புகழவும் வணங்கவும் தயாராகிவிடுகிறான்.

இத்தாறுமாறான நிலைமைகள் ‘புரட்சி’யல்லவாயினும், புரட்சியின் ஆரம்பக் கட்டங்களாகும்.

பசி புரட்சிக்குக் காரணமாகியிருந்தபோதிலும், பசியும் பஞ்சமும் தான் புரட்சிக்குக் காரணம் என்று சொல்லிவிட முடியாது. வங்கத்தில் 1940ல் ஏற்பட்ட பெரியதோர் பஞ்சம் காரணமாக பல்லாயிரவர் சாலைகளிலே பிணமாகியுங்கூட புரட்சி ஏற்படவில்லை. உழைப்பை வேறொருவன் உறிஞ்சுகின்றான் என்பதை அறிந்து, உரிமை முழக்கம் எழுப்ப உணர்ச்சியும், உடல் உரமும் ஓரளவாவது இருக்கவேண்டாமா?

உணவுத் தேவை பூர்த்தியாகி விட்டால் ‘புரட்சி’ ஏற்படாது என்றும் சொல்லிவிடமுடியாது.

உணவு மனிதனின் முதல் தேவையே தவிர, அது ஒன்றே மனிதனின் தேவையல்ல. உணவு கிடைத்ததும் உடை, உடை கிடைத்ததும் நல்ல உறையுள். உறையுள் கிடைத்ததும் மற்ற வாழ்க்கை வசதிகள் ஓய்வுநேரம், வாகன வசதிகள் அத்தனையும் தேவை. தொழில் முன்னேற்றம் 'வளர வளர உழைப்பாளி, முதலாளி இவர்களுக்கிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகள் வளர்ந்துகொண்டே செல்கின்றன. நெசவுத் தொழிலாளிகள் நவீன ஆலைத் தொழிலில் ஈடுபட்டனர். அதனால் ஆடை உற்பத்தி அதிகமானாலும் வசதியுள்ளவர்களே நல்ல ஆடைகளைப் பெறவும் உயர்ந்த ஆடைகளை பயன்படுத்தவுமான நிலையைக் காண்கிறோம். விஞ்ஞானத் தொழில் வளர்ச்சியினால் வாகன வழியில் விரைந்து செல்லும் வசதியும் வனப்பும்மிக்க கார்கள் செய்யப்பட்டன. செல்வந்தர் தான் அனுபவிக்கின்றனர்.

ரேடியோவும், ரிப்ரிஜிரேட்டரும், டெலிபோனும், டெலிவிஷனும், அத்தனை விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், தொழிலாளர் கையால தான் உருவாக வேண்டியிருந்தாலும் அனுபவிப்பர்கள், பணக்காரப் பரம்பரையில் பிறந்தவர்கள். ‘புரலிடேரியேட்’ என்றழைக்கப்படும், இந்த உழைக்கும் கூட்டத்தாருக்கு, தங்களுக்கென சொந்தமானது என்று கூறத் தக்கதாய் இன்றுங்கூட நம் நாட்டில் எதுவுமில்லை. வீடில்லை, நிலமில்லை, ஏன்? உழைக்கும் கருவிகள்கூடச் சொந்தமில்லை. நிகழ்காலத்திலோ அவர்கட்குப் பாதுகாப்பில்லை. எதிர்காலமோ இருள் நிறைந்தது. புழு பூச்சிகளாய்ச் சமுதாயத்திலே அவர்கள் நசுக்கப்பட்டனர்; நசுக்கப்படுகின்றனர். அவர்கள் பட்ட கஷ்டங்களைப் படும் துன்பங்களைக் கேட்பாரில்லை. இந்நிலையில், “வாழ்வின் சுவை என்ற ஒன்று எங்கே? எங்கே?” என்றலைந்திடும் அவர்களைச் சுற்றி, சுகமே வாழ்வாகக் கொண்டிடும் செல்வந்தர்கள்! இந்நிலை எரிச்சலை உண்டாக்காதா?

அந்த ‘எரிச்சல்’தான் சோஷலிசம் என்ற தத்துவம் எழக்காரணமாயிற்று. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் காரணமாக, கி. பி. முதல், இரண்டு மூன்று நூற்றாண்டுகளில்கூட கிரீசிலும், ரோமிலும், ஈஜிப்டிலும், பர்சியாவிலும் புரட்சிகள் ஏற்படத்தான் செய்தன.

பிரெஞ்சுப் புரட்சிகளும், உலகமறிந்த ரஷ்யப் புரட்சியும் இதனால் ஏற்பட்டதே.

1917ல் ரஷ்யாவில் சார் மன்னனின் ராணுவத்தினர், தொழிலாளர் குடும்பங்களை படாதபாடு படுத்தினர். 1918ல் ஜெர்மனியில் இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவாளர்களின் குடும்பத்துப் பெண்கள், ராணுவத்தினரால் அநியாயமாகச் சித்திரவதை செய்யப்பட்டனர்.

தூக்கியெறியப்பட்ட துருக்கி மன்னன் அப்துல்ஹமீத் இத்தகைய கொடுமைகளைச் செய்தவன்தான்.

1870-71ல் பிரான்சு நாட்டு அரசாங்கம் தனி மனிதனின் சுயமரியாதையைப் பறிக்கும் வகையில் நடந்துகொண்டதால் பெரியதோர் புரட்சி ஏற்பட்டது.

இத்தகைய புரட்சிகள் வரலாற்றில் ஏராளம் உண்டு. இங்கே சில.

பசியினால் பரிதவித்த மக்கள் எழுப்பிய புரட்சிகள் கீழ்வருமாறு:

முதலாம் நூற்றாண்டில் நடந்த ஏதன்ஸ், சபார்டா நகரங்களின் கிளர்ச்சிகள்.

இரண்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட ரோம், பைசாண்டியம் கலவரங்கள்.

**இங்கிலாந்தில்**

14ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் ஏற்பட்ட கிளர்ச்சி.

1381ம் ஆண்டுப் புரட்சி.

1648-49ம் ஆண்டுப் புரட்சி.

18ம் நூற்றாண்டு முடிவிலும் 19ம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் நடைபெற்ற கிளர்ச்சிகள்.

1919-21ல் நடந்த கிளர்ச்சி.

**பிரான்சில்**

1358ல் நடந்த செகுரியன் கிளர்ச்சி.

பிரஞ்சுப் புரட்சிகள் 1788-89, 1830-31, 1847-48, 1866-67, 1919-21.

**ஜெர்மனியில்**

14ம் நூற்றாண்டுக் கிளர்ச்சிகள்.

**ரஷ்யாவில்**

கி. பி. 1024, 1070, 1230-31, 1279, 1291, 1600-03, 1648-50, 1662, 1905-06, 1917 புரட்சிகள். ★

# பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்!

டெல்லி பாராளுமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவராக மீண்டும் நேரு பண்டிதர் தேர்ந்தெடுக்கப்பட்டதன்மூலம், வரும் ஐந்தாண்டு காலத்திற்கும் இந்தியத் துணைக் கண்டத்துப் பிரதமராக வரவிருக்கிறார்.

மக்களாட்சி முறை சிறந்து விளங்கும் நாடுகளில் தனி மனிதர்களுக்குத் தரப்படும் மரியாதைகளைவிட, வகிக்கும் பதவிகளுக்கே அதிக முக்கியத்வம் அளிக்கப்படும். அந்த முறையினாலேயே எவர் அந்தப் பதவிக்கு வந்தாலும் பதவியின் பொறுப்பு காரணமாக அதனை வகிப்பவரின் சொல்லுக்கும் செயலுக்கும் தனிச் செல்வாக்கு உண்டாகும். இது இல்லாமல், பதவிகளைவிட தனி மனிதரின் உயர்வுக்கும், மதிப்புக்கும் இடமளித்து 'பூஜா' மனப்பான்மையோடு அத்தலைவரைப் பின்பற்றத் தொடங்கினால், அவர் வகிக்கும் பதவியைவிடவும் அதிக முக்கியத்துவம் அவருக்குத் தரப்பட்டு, நாட்டின் எந்த ஒரு பிரச்சினைக்கும் அவரது தீர்ப்பே கடைசியாக்கப்பட்டுவிடும். அவரால் முழுதும் அறியப்படாத பல பிரச்சினைகளுக்கும், அவர் சொல்லிவைக்கும் மேற்போக்கான அபிப்பிராயங்கள் முழு அபிப்பிராயங்களாக்கப்பட்டு, அந்தப் பிரச்னைகளின் எல்லாத் தன்மைகளையும் தெளிவுபட உணர்ந்தவர்கள் தங்களின் மாறுபட்ட உண்மையான அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கு அஞ்சி, அவருக்கு 'ஆமாம்' போட நேரிடும் பரிதாபகரமான சம்பவங்கள் ஏற்பட்டுவிடும். அவர்கள் அப்படி ஏதாவது கருத்துக்களை வெளியிட்டாலும் அந்தக் கருத்துகள் செல்வாக்குப் பெற்றுள்ள தனி மனிதரின் சொற்களுக்கு முன்னால் பொதுமக்களால் அலட்சியப்படுத்தப்பட்டுவிடும். இந்த முறைகளை உணர்ந்துதான் மக்களாட்சி நாடுகள் தனி மனிதருக்குத் தரப்படும் முக்கியத்துவத்தைக் குறைத்து, பதவிக்கு வரும் எவருக்கும் அதிக கௌரவத்தை அளிக்கின்றன.

பதவிக்கு அளிக்கப்படும் கௌரவம் காரணமாகச் சிலர் அதிகச் செல்வாக்கைப் பெற்று ஏக அதிபதிகளாக ஆகிவிடுவதற்கும் வசதி இருக்கிறது. அந்த முறையில் செல்வாக்குப் பெற்ற அவர்கள் தாம் வகிக்கும் பதவிகளில் பலமுறை நீடித்தாலும்கூடத், தனி மனிதருக்குத் தரப்படும் முக்கியத்துவம் போலத் தரப்பட்டு, அதிலே தொல்லைகள் ஏற்படுவதற்கும் வழி உண்டு.

ஆகிய இந்த இரண்டு நிலைமைகளின் முடிவுகளும் உணர்த்துவதெல்லாம் தனி மனிதருக்கு அதிக முக்கியத்துவம் தரப்படக்கூடாது என்பதும், பதவிகளுக்குத் தரப்படுவது அவசியமாதலால் எந்த ஒரு மனிதரையும் நீண்டகாலம் ஒரே பதவியை வகிக்க வழி செய்யக்கூடாது என்பதும்தான். ஆட்சிப் பதவிகளில் மட்டுமல்லாமல் கட்சிப் பதவிகளிலும் இத்தகைய தனி மனிதர்களின் நீடிப்பு பல தொல்லைகளைத் தந்துள்ளதை தமிழ்நாட்டுக் காங்கிரஸ் வரலாற்றில் நாம் கண்டு வந்திருக்கிறோம். த. நா. கா. தலைவர் என்ற 'பட்டய'த்தோடு அந்தக் காலததில் செயல்பட்ட காமராசர் அவர்கள் சென்னை மாநில ஆட்சியில் எத்தனை காரியங்களை விருப்பப்படி செய்துவந்தார் என்பது எவருக்கும் புரியாததல்ல.

**பிரகாசம் மந்திரி சபை**
**ஓமந்தூரார் மந்திரி சபை**
**குமாரசாமிராஜா மந்திரி சபை**
**ஆச்சாரியார் மந்திரி சபை**

என்ற முறையில் தமிழகத்தில் நிலையானதொரு அமைச்சரவை ஏற்பட வழி இல்லாத 'புண்ணிய'த்தைக் கட்டிக்கொண்ட, பெருமை, மந்திரி சபை உற்பத்தியாளர் காமராசர் அவர்களையே சார்ந்ததாக அப்போது இருந்தது. அதுபோலவே அனைத்திந்தியக் காங்கிரசிலும் சிலரால் பல தொல்லைகள் தரப்பட்டன.

பண்டிதநேரு, புதிய பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்; அதுவும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். காங்கிரஸ் வட்டாரத்தில் இது பற்றிப் புகழப்படுகிறது. 'நேரு பத்து முறையும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்' என்று ஜனநாயகம் கற்ற காங்கிரஸ்காரர்கள்கூட வர்ணித்துப் பேசிக் காட்டுகிறார்கள். ஆனால் உண்மையிலே இது ஜனநாயகத்தின் பூரண உடன்பாட்டுக்குக் கட்டுப்பட்டதா? இந்த முறை நாட்டின் எதிர்காலத்தை உற்சாக மூட்டக்கூடியதா என்பதை வாக்களிக்கும் உரிமைபெற்றிருந்தவர்கள் யோசித்ததாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம், தனித்தன்மைக்கும், பூஜா மனோபாவத்திற்குமுள்ள வேறுபாட்டை அவர்கள் ஆராய்ந்து பார்க்கத் தவறி விடுகிறார்கள். கிரிக்கெட் விளையாட்டில் புகழ் சேகரித்துக்கொண்டவனை கால் பந்தாட்டத்திற்குத் தலைவனாக்குவதும், கஞ்சிரா அடித்துப் பெருமை பெற்றவனை கதாநாயகனாக நடிக்கச் செய்வதும் எப்படிப்பட்டதோ, அதைப்போல் ஒரு துறையில் சேகரித்த புகழை வைத்து வேறு துறைக்கு மகுடம் சூட்டிவைக்கும் 'கைதூக்கி'த் திட்டத்தை 'பெரும்பான்மை'யோர் ஆதரித்துவிடுவதின் விளைவுதான் ஒரே நபர் திரும்பத் திரும்ப அதே பதவிக்கு வருவதாகும்.

பதினோராவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று பேசப்படும் பண்டிதநேருகூட நன்றி தெரிவிக்கையில் ஒரே நிலையில், நின்று பேசவில்லை. பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற முறையில் தனது நன்றியுரையை நிகழ்த்தியிருக்கிறார்.

"நானறிந்த வரையில் நான் ஒருவன்தான் சென்ற பத்தாண்டுகளாக நீடித்து பிரதம மந்திரியாக இருக்கிறேன். எல்லா தேசங்களிலும் அடிக்கடி மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஜனாதிபதியோ, பிரதம மந்திரியோ மாறியிருக்கிறார்கள். அது சகஜமாக நடக்கக் கூடியது. ஆனால் இந்தத் தேர்தலில் சகஜத்தைவிட்டு விசேஷ முறையிலேயே நாம் நடந்துகொண்டிருக்கிறோம்.

"இதைப் பற்றி நான் உங்கள் மீது குறை கூறவில்லை. ஆனால் தனிப்பட்டவர் ஒருவரைப் பொறுத்த வரையில் இது பெரிய சோதனையாகும்."

—இது பண்டிதரின் பேச்சின் முதற்பகுதி. நேரு அவர்கள் என்ன சொல்ல நினைக்கிறார் என்பதை அவரால் விளக்கமுடியாத வகையில் அவர் பேசியிருக்கிறார்—நன்றியுரையின் முதற் கட்டத்தில்! உலகம் தன்னை மதிக்கின்ற அளவுக்கு, அவரது நெஞ்சில் எழுந்துள்ள ஆசைக்கனலை அணைத்துக்கொள்ள இயலவில்லை பண்டிதரால்! அலைமோதும் உள்ளத்தோடு அவர் பேசியிருக்கிறார். உண்மையான ஜனநாயக வாதியா? உயிருள்ளவரை ஊராளப் பிறந்தவரா? என்று அவராலேயே அவரைக் கணித்துக்கொள்ள முடியாமல் அங்கத்தினர் மத்தியில் தன்னைத் தானே குழப்பிக்கொண்டிருக்கிறார்.

"இந்தியாவில் நபர்களைக் கவனிப்பது வழக்கம். அதுவும் ஒருவர் நீண்டகாலம் ஒரே பதவியிலிருந்தால் இது இன்னும் குறிப்பாகக் கவனிக்கப்படும். ஒரு மாறுதல் அல்லது ஒரு அதிர்ச்சி ஏற்படவேண்டும். இல்லாவிடில் எல்லாம் உள்ள நிலைமையிலேயே இருந்துவிடும்." - இதுவும் பண்டிதரின் சொற்பொழிவுதான். பதினோராவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பண்டிதரின் பேச்சு இது- அவர்தான் சொல்கிறார் ஒருவரே ஒரே பதவியிலிருக்கக்கூடாது என்று. அதே நேரத்தில் 'நான் களைத்துவிட்டதாக அர்த்தமில்லை' என்றும் பேசுகிறார். அவரது இத்தகைய குழப்பமான பேச்சு 'நேரு என்ன நினைக்கிறார்' என்று காங்கிரஸ்காரர்களாலேயே புரிந்துகொள்ள முடியாமற் போய்விட்டது.

அமெரிக்க நாட்டு ஜனநாயகத்தைச் சுட்டிக்காட்டுகிறவர், ரூஸ்வேல்ட் நான்காவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் அவரது வாழ்க்கையே பாதிக்கப்பட்டுவிட்டது, என்று எடுத்துக் காட்டுகிறவர், தனது கருத்துக்கு மாறாக, தான் பதினோருவது தடவை பதவிக்கு வந்த பிறகுதான் ஒரே ஆள் பலமுறை ஒரே பதவியில் ஒட்டிக்கொள்வது தீது என்று பேசுகிறார். தனக்குப் பிறகு இந்தியாவுக்கு ஒரு உருப்படியான ஆள் தேவை என்ற எண்ணம் நேருவுக்குத் தெரிந்திருந்தும் அதற்கான வழியிலே அவர் செல்ல முற்படவில்லை. 'தான் களைப்படையவில்லை' என்று தன்னுடைய பலத்திலே நம்பிக்கை வைத்திருப்பவர் - திடசித்தம் கொண்டவர் - எதையும் சாதிக்கும் வல்லமை படைத்தவர் ஏன் ஒரு புதிய பிரதமரைத் தயாரித்துவிடக் கூடாது? அத்தகைய பெருநோக்கு ஏன் பண்டிதரின் நெஞ்சில் அரும்புவிடவில்லை? ஜனநாயகத்தில் மெய்யான பற்றுக்கொண்டவர்களுக்கும், இருக்கின்ற ஜனநாயம் சாகாது பாதுகாக்கக் கடமைப்பட்டவர்களுக்கும் இருக்க வேண்டிய பெருங்குணம் அது தானே! புதியவர்களை நிர்வாகத்திற்குத் தகுதியுடையவர்களாக்குவது தானே! அதுபோன்ற 'பரந்த நோக்கம்'தான்-விட்டுக்கொடுக்கும் மனப்பான்மைதான் நாடு வாழ விரும்புவோரிடம் இருக்கவேண்டிய தனிப் பண்புகளாகும். ஆகவே நேருப் பண்டிதர் அவர்களின் நன்றியுரையில் அடங்கியுள்ள ஜனநாயக போதனை, எங்கோ ஆஸ்ரமத்தில் இருந்துகொண்டு பேசவேண்டியதாகும். தவறிப் பேசிவிட்டாரா, தத்துவத்தைக் குழப்புகிறாரா? நமக்குப் புரியவில்லை! ★

"பெரியார் கேலி பேசுகிறாரென்றால் அது கேலி அல்ல. 'என்னிடத்தில் பாடம் பெற்றும் பதினைந்துதானா? எத்தனை ஆற்றல் தந்தேன்-அப்படி. யிருந்தும் 'பதினைந்துதானா' என்று கேட்பதுபோல்தான் பெரியார், நம்மைக் கேலி செய்வது இருக்கிறது. இதனால் தான் நான் அடிக்கடி கூறுகிறேன் - 'ஒரே கம்பெனிதான்; லேபிள் தான் இரண்டு' - என்று"

-அண்ணா.

## லேபிள் இரண்டு!

"112 பேரை நிறுத்தி வெளியில் 10 பேரை ஆதரித்து தேர்தலில் படுதோல்வியுற்று நாலாந்தரத்தில் இருப்பவர்களே கண்ணீர்த் துளிகள். 43 பேர் டெபாசிட் இழந்து 15 பேர்களே வெற்றி பெற்றிருக்கிறார்கள்."

-பெரியார்.

,, போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

# எண்ணம்

மலர் 3 ‖ 6–4–57 ‖ இதழ் 29

## மழுப்புகிறார்கள் !

சென்னை அரசியலார், அடுத்த சட்டசபைக் கூட்டத்தை, புதிய கட்டிடத்திலிருந்து மாற்றி கோட்டையிலுள்ள பழைய கட்டிடத்தில் நடத்தப்போவதாக சர்க்கார் அறிக்கை விட்டிருந்தது. அதைக் கண்டித்து, தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்களின் முதற் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதில்,

"பொதுமக்களும், பத்திரிகையாளர்களும் நல்ல அக்கரை காட்டி நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கும், தொடர்பு கொள்ளுவதற்கும், சட்டசபை உறுப்பினர்கள் எளிதாகச் சென்று வருவதற்கும் ஏற்ற வகையில் சென்னை-மவுண்ட்ரோடில் சுமார் பத்து இலட்சம் ரூபாய்க்குமேல் செலவழித்துப் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் சட்ட சபைக் கட்டிடத்தைக் காரணம் காட்டாமல் புறக்கணித்துவிட்டு, இத்தகைய வசதிகளற்றதும், பொதுமக்கள் பெருமளவுக்குத் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு ஏற்ற தல்லாததுமான கோட்டையிலுள்ள கட்டிடத்தில் வீண் ஆடம்பரச் செலவு செய்து இனி சட்டசபையைக் கூட்டுவதற்கான ஏற்பாடு களைப் பொதுமக்களின் கருத்துக்கு மாறாகவும், சட்டசபை உறுப் பினர்களைக் கலக்காமலும் செய்யும் சென்னை அரசியலாரின் ஏற் பாட்டைக் கண்டிப்பதுடன் அந்த ஏற்பாட்டை உடனடியாகக் கைவிட்டு முன்போலவே, மவுண்ட்ரோடு கட்டிடத்தில் தொடர்ந்து சட்டசபைக் கூட்டம் நடைபெற வழி செய்யவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக சட்டசபைக் கட்சி சென்னை அரசிய லாரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது."

—என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானம் வெளியாகி இரண்டு நாட்களுக்குப் பிறகு, சர்க்கார் கண்டனங் களுக்கு பதில் கூறும் வகையில் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார் கள். அந்த அறிக்கையில், உண்மை விபரங்கள் புரியாமல் சிலர் கண்டனம் தெரிவிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கண்டனம் தெரிவித்தவர்கள் யாரும் விபரம் தெரிந்துகொள்ளாமல் பொறுப் பற்ற முறையில் கண்டனம் தெரிவிக்கவில்லை. பல இலட்ச ரூபாய் களைக் கொட்டி புதிதாகக் கட்டிய கட்டிடத்தை புறக்கணித்துவிட்டு ஏன் பழைய கட்டிடத்திற்குப் போகவேண்டும் என்று எதிர்க்கட்சிக் காரர்கள் கேட்கிறார்கள். இதிலே என்ன தவறு இருக்கிறதோ நமக்குத் தெரியவில்லை. அதையும் சர்க்கார் அறிக்கை தெளிவு படுத்தவில்லை.

ஏன் வீண் செலவு என்று கேட்கிறார்கள் மக்கள் கட்சியைச் சார்ந்தவர்கள். இது வீண் செலவில்லை என்று சர்க்காரால் நிரு பிக்க வழியில்லை.

கோட்டைக் கட்டிடத்தைப் புதுப்பிக்க தனித்தனிச் செலவு தொகைகளைக் குறிப்பிட்டுவிட்டு, இவைகளெல்லாம் வேறு திட்டம் என்ற தனிப் பிரிவில் சர்க்கார் செலவு செய்கிறது. அரசாங்கத்தின் வாக்குமூலப்படி, கோட்டையிலுள்ள அலு வலகத்தை விரிவாக்க வேண்டும்; இப்போது இட நெருக்கடி யாக இருக்கிறதென்றால், அந்த நெருக்கடியோடு ஏன் சட்டசபைக் கூட்டத்தையும் அங்கு கொண்டுபோக வேண்டும்? பின் எதற்காக மவுண்ட்ரோடில் புதிய கட்டிடத்திற்கு பல லட்ச ரூபாயில் செலவு செய்யவேண்டும் என்று கேட்டால் 1952 சட்டசபை உறுப்பினர் கள் 375 பேர் இருந்தார்களாம், அதனால் சௌகரியமாகக் கூடு வதற்கு 'தற்காலிக'மாக ஒரு கட்டிடத்தைக் கட்டினார்களாம். நிரந் தரமாக இருப்பதற்கே ஒவ்வொரு நாட்டு அரசாங்கத்திலும் யோசித்துக் கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். ஆனால் இங்கே இருக்கிற 'தேசிய திருவாளர்'கள் தற்காலிகத்திற்கே இத்தனை லட்சத்தைப் பாழ்படுத்தியிருக்கிறார்கள்.

மொத்தத்தில் சர்க்கார் விட்டிருக்கும் அறிக்கை எதிர்ப்பாளர் களுக்கு விடுத்திருக்கும் போலிச் சமாதானமாகும். சதித்திட்டமும், ஏமாற்று வேலைகளும் நிறைந்த அந்த அறிக்கையை மக்கள் துச்ச மென மதிப்பார்கள் என்பதிலே தடையில்லை. மக்கள் மத்தியிலே எந்த முகத்தைக் காட்டிக்கொண்டு சட்டசபைக்குள் போவது என்ற அச்சம்தான் அவர்களை கோட்டைக்கு மாற்றத் தூண்டியது என்பதில் சந்தேகமில்லை.

பொதுமக்கள் கவனம் வைத்துக்கொள்ள வேண்டும். காங்கிர சார் சட்டசபையை கோட்டைக்கு மாற்றுவதால் பொதுமக்கள் பணம் வீண் விரயமாகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. அவர்கள் அதற்குக் காட்டும் காரணங்கள் நம்பத்தாகாத காரணங் கள். கேலிக்குரிய காரணங்கள். கட்டிடம் மாற்றும் பிரச்சினை முதல் சட்டசபைக்கு வரவேண்டும். விவாதம் நடைபெற வேண்டும். அதுதான் முறை!

## காஞ்சியும் மாம்பலமும்...

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

**கூடாது; அவனுக்கென ஒரு வீடு, ஒரு குடும்பம், அவனுக் கெனச் சில உரிமைகள் வேண்** *டும். அதுதான் அவனது முன் னேற்றம் என்ற நமது கருத்தைப் புரிந்துகொண்டு நமக்குக் கை கொடுக்க முன்வந்தால் அவர் களோடு நாம் மனதுவிட்டுப் பேசி அவர்களது ஒத்துழைப் பைப் பெறத் தயாராக இருக் கிறோம். அதனால்தான் அறிஞர் அண்ணா அவர்கள் 31ம் தேதி கடற்கரைக் கூட்டத்தில்,* **'திரா விடத்தைக் காப்போம் என்றால் யாரிடமிருந்து காப்பது, எப்படிக் காப்பது, திராவிடத்திற்கு இப் போது என்ன ஆபத்து என் பதை ஆச்சாரியார் தெளிவு படுத்தவேண்டும்'** *என்றார்கள். என்ன பொருள் அதற்கு? கழ கத்தின் அடிப்படை இலட் சியத்தைப் புரிந்துகொண்டு உதவிசெய்ய முன்வந்தால் ஆச் சாரியாரின் உதவி தென்னாட் டிற்கு இன்றியமையாததாகக் கூடக் கருத இடமிருக்கிறது என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லாமற் சொன் னார்கள்.*

*இவ்வாறு திட்டவட்டமாக அறிவித்த பிறகுதான், அண் ணாத்துரை அப்பாவியல்ல என்று தெளிவாக்கிய பின்னர்தான், ஆச்சாரியார் அண்ணாத்துரை யின் வலையிலே விழுந்துவிட்ட தாக விசனப்பட்டுக் கொண் டிருந்தவர்கள் கொஞ்சம் தலை தூக்கி, 'நம்ம ஆச்சாரியார் அண்ணாத்துரையையும் கவிழ்க் கத்தான் முயன்றிருக்கிறார்' என்று மனச்சாந்தி செய்து கொண்டார்கள்.*

*அவர்களது மனச்சாந்தியில் நமக்குத் திருப்திதான். இல்லா விட்டால் ஆச்சாரியார்தான் வீடு வீடாகச் சென்று அண்ணாத் துரைக்கு ஓட்டுப் போடச் சொன்னார் என்றல்லவா ஓயாது சொல்லிக் கொண்டிருப்பார்கள். பாவம்! அப்பாவிகள், பிள்ளைப் பூச்சிகள்!*

*எது எப்படியானாலும், யார் என்ன நினைத்தாலும் கழகத்தின் பருவம் மாறியிருக்கிறது என் பதைமட்டும் யாரும் மறுக்கமாட் டார்கள். அந்தப் புதிய பருவம் ஆச்சாரியார்மூலம் வளர்ந்தால் தான் என்ன? நமக்கென்ன தடை? பலர் பலவற்றைக் கூறு வார்கள்! 'நம்ப ஆச்சாரியார் நம்மகிட்டே வரல்லியே' என்ற எண்ணத்தில் நாட்டையே குழப்புவார்கள். அதைப் பற்றிய கவலை நமக்கில்லை. அவர்களெல் லாம் அந்திய காலத்தில் ஆட்டங் கண்டு போயிருப்பவர்கள். இப்போதுள்ள பிரச்சினை ஆச் சாரியார் திராவிடத்தைக் காக்க மனப்பூர்வமாக முயற்சிப்பாரா என்பதுதான்!*

**இமாலயத்தவறு.**

**கண்கூடான ஆபத்து.**

**காந்திஜியின் நாசக் கொள் கை.**

**சுயநிர்ணயக் குழப்பம்.**

**வேதாளத்தை எதிர்த்துப் போரிடுங்கள்.**

*—என்றெல்லாம் தலைப்பிட்டு எழுதி பெரியதொரு எதிர்ப்புக் காட்டி பாக்கிஸ்தான் பிரி வினையை எதிர்த்தபோதும்,*

*பிரிக்கப்பட்ட நாடுகள் மீண் டும் ஒருபோதும் சேராது; அயர் லாந்து, போர்ச்சுகல், ஸ்பெயின், பர்மா, இலங்கை முதலியவை இதற்குச் சான்றுகள் என்று பலப்பலர் 'முழங்கி'யபோதும் 'பாக்கிஸ்தான் பிரிவினை' வெற் றிக்கு மூலகாரணமாக இருந்த ஆச்சாரியார் முயன்றால் வெற்றிக் கான வழி விரைவில் பிறக்கும்.*

*[ஆச்சாரியார் இன்றேல் நமது இலட்சியம் ஈடேறாது என்ப தல்ல] என்ற ஆசைதான் நம்மை உலுக்குகிறது, ஆச்சாரியார் கை கொடுக்கமாட்டாரா என்று துடித்துக்கிடக்கிறது. இதையே அண்ணாவின் பாணியில் குறிப் பிடுகிறோம்: "பாக்கிஸ்தான் வேண்டுமென்றபோது பாரதத் தைத் துண்டு போடுவதா? பசுவை வெட்டுவதா? - என்ற ஆச்சாரியார், பின்னர் பாக்கிஸ் தான் பிரிவினையை ஆதரித்த ஒரே தலைவரானார். வேட்டியில் பொத் தல் விழுந்துவிட்டால் அதனை இரண்டாகக் கிழித்துவிடு - அது தான் உபயோகரமான யோசனை என்று கூறினார். பாக்கிஸ்தான் கோருவது சரியே, தரத்தான் வேண்டும் என்று சொன்னார். அதுதானே இது என்று நமது நெஞ்சு அடித்துக்கொள்கிறது."*

*எனவே ஆச்சாரியார் முயன்று திராவிடத்தைப் பேராபத்திலி ருந்து காக்கட்டும். நமது குர லுக்குக் கூர்மையிருந்தாலும், சக்தியிருந்தாலும் போய்ச் சேர வேண்டிய இடத்திலே நமது சொல் அனுமதிக்கப்படுவதில்லை. ஆச்சாரியார் குரலில் தெளிவு இருந்தாலும், சோர்வு இருந்தா லும் மூலச் சிலையினருகே போய் ஒலிப்பதற்குச் சக்தியிருக்கிறது. அந்தச் சக்திதான் நமக்கு இப் போது தேவை; ஜின்னாவுக்கு அந்த சக்தியிருந்ததால் தான் பாகிஸ்தானை அவர் எளிதில் காண முடிந்தது.* ★

# ★ கூடிக் குடிகெடுத்த 'குணளர்'கள் ★

தமிழகத்தில் தேர்தல் முடிந்து விட்டது. இந்த தேர்தல் நாட்டு மக்களிடையே எந்தெந்த கட்சிக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதை ஓரளவு வெளிப்படுத்தி விட்டது. இதன்படி இன்றைய தினம் காங்கிரசுக்கு அடுத்தபடியாக பெரும்பான்மையாக மக்கள் ஆதரவைப் பெற்று விளங்குவது திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பது நிருபணமாயிற்று. இதுவரை காங்கிரசுக்கு அடுத்தபடி செல்வாக்குள்ள கட்சி நாங்கள் தான் என்று மார்தட்டியவர்கள் சோர்ந்து போனார்கள். மண்ணைக் கவ்விய மாவீரர்கள், தோற்ற ஆத்திரத்தில், எங்கிருந்து கொண்டு, எதைப் பேசுகிறோம் என்பதையே மறந்து, வாய்க்கு வந்தபடி பேசியும், எழுதியும் தங்களைத் தாங்களே திருப்திப்படுத்திக் கொள்ளுகின்றனர். உதாரணமாக நமது கம்யூனிஸ்ட் தோழர்களை எடுத்துக் கொள்ளுவோம். சென்ற தேர்தலில், கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்று, சட்டசபையில் எதிர்கட்சியாக விளங்கினர். ஆனால், இந்தத் தேர்தலில், 55 இடங்களில் போட்டியிட்டு, நான்கு இடங்களையே கைப்பற்றினர். இந்த தோல்வியிலிருந்து, இவர்கள் நாட்டு மக்களிடத்தில் நம்பிக்கை இழந்ததன் காரணத்தை ஆராய்ந்து திருத்திக்கொள்ள வேண்டியிருக்க, அதற்கு மாறாக, தேர்தலுக்கு முன்னிருந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது வசைபுராணம் போட்டியிடவில்லை. ஆனால், மாறாக, கம்யூனிஸ்ட்கள் இந்தியா முழுவதும் போட்டியிட்டனர். கேரளத்தில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியும் பெற்றனர். தமிழ்நாட்டில் தோல்வியும் அடைந்தனர். இது தான் நிலைமை. கேரளத்தில் போட்டியிடாத தி. மு. க. கேரளத்தில் கம்யூனிஸ்ட் வெற்றிக்காக ஏன் ஆத்திரமோ, வயிற்றெரிச்சலோ படப்போகிறது? அப்படி வயிற்றெரிச்சல்பட வேண்டியவர்கள் கேரளத்தில் போட்டியிட்டு கரைந்து போன ஆர். எஸ். பி., பி. எஸ். பி. போன்ற கட்சிகளாய்த்தான் இருக்க முடியுமே ஒழிய, தமிழ்நாட்டில் உள்ள தி. மு. க. வுக்கு நஷ்டம் என்ன ஏற்பட்டுவிட்டது கவலைப் படப்போகிறது?

ஆனால், அதற்கு மாறாக, தி.மு.க. மகிழ்ச்சியே அடைகிறது. காரணம், நேற்றுவரை ஆண்டுகொண்டிருந்த பிற்போக்குக் காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்ததோடு மட்டுமல்லாமல், இதுநாள் வரை தமிழரின் நியாயமான உரிமைகளான, தமிழ்ப் பகுதிகளை ஏற்கெனவே, கம்யூனிஸ்ட்கள் கூறி வந்துள்ளபடி, கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு, பெரும்பான்மையோர் பேசும் மொழி அடிப்படையில் பிரிவினை செய்து நீதி வழங்குவர் என்று எண்ணிக் களிக்கிறது. மேலும், அவர்கள் சாதனையைக் கூர்ந்து கவனித்துக் கற்றுக் கொள்ள எண்ணுகிறது. அப்படியிருக்க, ஏனோ "ஜனசக்தி" கேரள வெற்றியைக் கண்டு நாம் பொருகாகப் போராடும் கம்யூனிஸ்ட் கட்சி இன்று ஓரிடத்தில் மந்திரி சபை அமைப்பதைக் கண்டு குதூகலித்திருக்க வேண்டும்." ஆகவே, நாம் "கம்யூனிஸ்ட் மந்திரி சபை கவிழாதா" என்று எண்ணுவதாக கனவு கண்டிருக்கிறார்கள் அவர்கள்.

இந்தக் கனவுக்கு அவர்களுக்கு ஆதரவாகக் கிடைத்த அருமணி இதுதான். "பி. சோ. கட்சியைத் துணைக்கு அழைப்பது எதற்காக? கூடிக் கெடுக்கவா? பழியில் பங்கு தரவா?" என்று யாரோ ஒரு வாசகர் 'நம்நாடு' ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட இந்த வார்த்தைகள்தான். இதை அந்த வாசகர் எழுதியவுடன் முனை ஒடிந்த ஈட்டியைத்தூக்கிக்கொண்டு மோத வரும் 'ஜனசக்தி', அவர்கள் அருந்தலைவர் பி. ராமமூர்த்தி அடிக்கடி மேடைகளில் கூறும், "ஆத்ம சோதனையை" தாங்களே செய்து பார்த்துக்கொண்டால் இந்த ஆத்திரம் வராது. அதற்கு மாறாக, யாரோ ஒருவர் உண்மையைப் பச்சையாக எடுத்துக் கூறியவுடன் உடம்பெரிச்சலோடு சாபம் கொடுக்க வருகிறது.

பி. எஸ். பி. யோடு உதட்டளவு நேசம் காட்டும், கம்யூனிஸ்ட்கள், காது, 'டெபாசிட்' தேராது என்று தெரிந்தவுடன், அந்தோணிக்கு எதிராக "ஆள் தேடும் படலம்" ஆரம்பிக்கப்பட்டது. அப்பாவி, ஜி. ராஜமன்னார் கிடைத்தார். அவர் முதன் முதலில் ஆர்பர் தொகுதியிலிருந்து, சட்டசபைக்கு மட்டுமே போட்டியிடுவதாக இருந்தார். இவர் பி. எஸ். பி. யைச் சேர்ந்தவர் இவரைப் பிடித்து, பார்லிமெண்ட் தொகுதிக்கும் சேர்த்து நிறுத்தினர். பி. எஸ். பிக்கும், லோகியா கட்சிக்கும் இடையே உள்ள தகராரின் காரணமாக இவரும் நிற்கத் துணிந்தார்.

கூட்டு அடிப்படையில் நின்ற ஜி. ராஜமன்னரை, நடைமுறையில் ஆதரித்தார்களா என்றால் இல்லை. வண்ணாரப்பேட்டைத் தொகுதியில் கம்யூனிஸ்ட் அபேட்சகராக நின்ற **A. S. K.** அய்யங்கார், தனக்கு ஒரு ஓட்டும், அந்தோணி பிள்ளைக்கு ஒரு ஓட்டும் போடுமாறு கேட்டார். காரணம் இத்தொகுதியில் வசித்த துறைமுகத் தொழிலாளிகளில் பெரும்பான்மையோர் அந்தோணிப் பிள்ளையின் தலைமையில் இருப்பவர்கள். அதனால், அவர்கள் ஆதரவைப் பெற்றுத்தான் வெற்றிபெற இப்படிப் பிரசாரம் செய்தார். அதே நேரத்தில், துறைமுகத் தொகுதியில்

# ★ நாடிப் போய் நட்புறவு கொண்ட விந்தை! ★

...டிக்கொண்டிருந்ததைப்போலவே இன்றும் விடாமல் முனை ஒடிந்த ஈட்டியைக் கொண்டு தாக்க வருகின்றனர். இந்த தேர்தலில், கம்யூனிஸ்டுகள் தங்களுடைய தேர்தல் பிரச்சாரம் முழுவதையும், தி. மு. க. வைத் தாக்கி மகிழ்வதிலேயே செலுத்தினர். ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சியைப் பற்றி அவர்கள் கவலைப்படவே இல்லை. அதற்கு மாறாக, தங்கள் தேர்தல் பிரசாரங்களில், மறைமுகமாகவும், (வெளிப்பட்ட முறையில்) நேரிடையாகவும், "எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள், இல்லாவிட்டால் காங்கிரசுக்கு போடுங்கள். இந்த இரண்டு கட்சியைத் தவிர நாட்டில் வேறு எந்தக் கட்சியும் உருப்படாது" என்று கூறினர். இதன் விளைவுகளை அவர்கள் நாளிதழ் "ஜனசக்தி" கூட, பெருமிதத்தோடு ஆசுரித்து மகிழ்ந்தது. காங்கிரஸ் தோற்றது கூட முக்கியமாகப் படவில்லை அதன் கண்களுக்கு. அதற்கு மாறாக தி. மு. க. வின் தோல்வி தான் பிரமாதமாகவும், மகிழ்ச்சி அளிக்கும் செய்தியாகவும் பட்டிருக்கிறது. இதிலிருந்து, தமிழக அரசியலில், இந்தக் கட்சி பொருமையாலும், வயிற்றெரிச்சலாலும் புழுங்கிச் செத்துக்கொண்டிருக்கிறது' என்பதை சாதாரண மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நிலைமை இவ்வாறு இருக்க, நேர்மாறாக களிக்களிப்படைகிறது 'ஜனசக்தி.' திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ்நாட்டில் மட்டுமே, தன்னுடைய அபேட்சகர்களை நிறுத்தி போட்டியிட்டது என்பதை இந்த நாடு அறியும். தி. மு. க. கேரளத்தில் போட்டியிடவில்லை. ஆந்திரத்திலோ அல்லது மைசூரிலோ மைப்பட வேண்டுமென்று விரும்புகிறது. இதன் அடிப்படையில் எழுதப்பட்டதுபோல்தான் தோன்றுகிறது 27-3-57 'ஜனசக்தி' ஈட்டிமுனை.

ஒரு ஊரில், இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில், ஒருவனுக்குத் திருமணம் முடிக்க ஏற்பாடானது. திருமண நாளன்று, தாலிகட்டும் நேரம் நெருங்கியது. மணம் செய்து கொள்பவன் நண்பனைத் தேடினான். நண்பனோ, விருந்தினரை வரவேற்பதில் மும்முரமாய் இருந்தான். மணம் முடிந்தது. மணமகன் மிகக் கோபமாக நண்பனைத் தேடி, தனியாக அழைத்துச் சென்று, "நீ நேர்மையற்றவன்- நான் மணம் செய்துகொள்வதில் உனக்குக் கொஞ்சம்கூட மகிழ்ச்சியில்லை" என்றெல்லாம் ஆத்திரமாகப் பேசினான். நண்பனுக்கு ஒன்றும் புரியவில்லை. மாறாக, அமைதியாகக் காரணம் வினவினான். மணமகனே திருப்பி, "நீ, உண்மையான நண்பனாய் இருந்திருந்தால் மணமகளுக்கு நீயும் ஒரு தாலி கட்டியிருக்க வேண்டும். இதுதான் நீ செய்த மகத்தான துரோகம் என்றானும் அவன். இந்தக்கதையைப் போலத்தான் இருக்கிறது, நமது கம்யூனிஸ்ட் 'மணமகன்' நிலை. மணமகன் நிலையில் உள்ள, "ஜனசக்தி" (27-3-57) எழுதுகிறது :-

"முற்போக்குத் திட்டமுள்ள ஒரு கட்சி மந்திரி சபை அமைப்பதைக் கண்டு பேரானந்தப்பட்டிருக்க வேண்டும். சமதர்ம இலட்சியத்திற் தமிழ்நாட்டில் நடந்த இந்த தேர்தலில் பி. எஸ். பி. யை காலைவாரி விடவில்லை என்று கூறமுடியுமா? இந்தப் புகாரை நாம் கூறவில்லை. கம்யூனிஸ்ட்களை நம்பி கழகத்தைக் திட்டிக்கொண்டு திரிந்த பி. எஸ். பி. தலைவர் திரு. சின்னதுரை அவர்களே தனது நாளிதழ், "சமுதாயத்"தில் எழுதியுள்ளார். அது போகட்டும். இதோ சில உண்மைகள்! இதை ஆதாரபூர்வமாக மறுக்க 'ஜனசக்தி' முன் வருமா? வட சென்னை பார்லிமெண்ட் தொகுதியில் **S. C. C.** அந்தோணி (பிள்ளை) அவர்கள் போட்டியிடப் போவதாக முதன்முதலில் அறிவித்தார். இதைக் கண்ட கம்யூனிஸ்ட்கள் அவரை வெற்றிபெற முடியாதபடி தடுக்க, காங்கிரஸ் எதிர்ப்பு ஓட்டுகளைப் பிரித்து காங்கிரஸ் வெற்றிபெற வாய்ப்பேற்படுத்த விரும்பினர். இதற்குக் காரணம், சென்னை துறைமுகத் தொழிலாளர் சங்கம்இரண்டு தொழிற் சங்கங்களாக உள்ளது. ஒன்றுக்குத் தலைவர் திரு. **S. C. C.** அந்தோணி (பிள்ளை) ஆவார். மற்றொன்றுக்கு திரு. **A. S. K.** அய்யங்கார். திரு. அந்தோணி எம். பி. யானால் தங்கள் சங்கம் தொழிலாளிகள் மத்தியில் நம்பிக்கை இழந்துவிடும் என்ற காரணத்திற்காக, முதன்முதலில் திரு **A. S. K.** அய்யங்கார் அவர்களே பார்லிமெண்ட்டுக்கும், சட்டசபைக்கும் போட்டியிடப் போவதாக அறிக்கை வந்தது. ஆனால், தனக்கு ஆதரவு கிடைக் சட்டசபைக்கும் போட்டியிட்ட ராஜமன்னரை அங்கிருந்த கம்யூனிஸ்ட்கள் "அண்டர் கிரவுண்ட்" வழக்கப்படி காலைவாரி விட்டனர். இது நடந்த உண்மையாகும். நேரில் கண்ட காட்சி. இப்படியே இன்னும் பல இடங்களில், பி. எஸ். பி. அபேட்சகரை காலைவாரி விட்டிருக்கின்றனர். அதாவது மதுரை மத்திய தொகுதியில் பாஹுலேயன் அவர்களைக்கூட என்று கேள்வி! இப்படி நம்பி நிற்கும் நண்பர்களைக் காலைவாரிவிடும் கம்யூனிஸ்ட்களை எப்படி நம்புவது என்று, யாரோ ஒரு வாசகர் கேட்பது "ஜனசக்தி"க்கு மிகக் கோபத்தை ஊட்டுகிறது. வாசகரின் கருத்து எப்படிக் கட்சியின் கருத்து ஆகும் என்பதைக்கூட இந்தக் கோபத்தில் சிந்திக்க மறந்துவிட்டது. அதுவுமன்றி ஜனசக்தி தி. மு. க. விற்கே "பண்பு" போதிக்க வருகிறது.

நவீன உலக சரித்திரத்தில், அரசியல் வரலாற்றில் கம்யூனிஸ்ட் கட்சியின் "பண்பு" எந்த அளவுக்கு செயலாற்றப்பட்டு வந்திருக்கிறது என்பதைப் படித்திருப்போருக்கு, அவர்களின் கூடிக் குடி கெடுக்கும் சதி தெரியும்! நடைமுறை வரலாற்றை மறந்து பேசித் திரியும், இந்த சரித்திரப் புரட்டர்களை நாடும் அறியும், நாமும் அறிவோம்!

—நாவரசன்.

## நூல் நயம்

### அழகு ராஜா

மாபசான் - பாரீஸ் நகரத்தின் மூலைமுடுக்கெல்லாம் சுற்றித் திரிந்தார். தனது கதைகளுக்கான கருப்பொருளை, தான் நேரில் கண்ட காட்சிகளிலிருந்து எடுத்துக் கையாண்டார். பாரீஸ் நகரத்தின் வீதிகளிலே திரிந்த மேன்மினுக்கிகளைப் பற்றி அவர்களின் ஆபாசமான வாழ்வைப் பற்றி, இன்னும் சமுதாயத்தின் குறைபாட்டுக்குக் காரணமான, ஒழுக்க முறைதவறி நடைபெறும் சம்பவங்கள் பற்றியெல்லாம் எழுதிக் குவித்தார். அவர் எழுதிய கதைகளில் எல்லாம் சமுதாயத்தின் கோணல்பாதையை-அப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலைகளை வன்மையாகக் கண்டித்திருக்கிறார். அது மட்டுமல்ல ரஷ்யப் பேராசிரியர் கூறியதுபோல "மாப்பசானிடம் கதை சொல்லும் திறமையும் நளினமும் அமைந்திருக்கின்றன. அதற்கு எடுத்துக்காட்டு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள "அழகு ராஜா" கதை முழுதும் விரவியிருக்கிறது.

காரை. ஏ. எம். அலி, சரளமான தமிழ் நடையில் மொழிபெயர்த்திருக்கிறார். 300 பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தை பிரேமா பிரசுரத்தார் அழகாக வெளியிட்டிருக்கிறார்கள்.

விலை ரூ. 3-0-0

கிடைக்குமிடம் :

**பிரேமா பிரசுரம்,**
சென்னை 24.

★

### தலைநகரம்

இது ஒரு சரித்திரக் கற்பனை நாடகம். நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் அண்ணன் திடீரென்று நகரத்தின் மத்தியில் ஒரு தங்க ஸ்தூபி எழுப்ப வேண்டுமென்கிறான். தம்பி அதை மறுக்கிறான். இதனால் அண்ணனுக்கும் தம்பிக்கும் தகராறு வளருகிறது. இறுதியில் தம்பி தன் நாட்டைவிட்டு ஓடி, வேறொரு சக்ரவர்த்தியிடம் மாறுவேடத்தில் பணிபுரிகிறான். அந்தச் சக்கரவர்த்திக்கே, தனது தங்கை மனைவியாகும் நிலை ஏற்படுகிறது. இதையும் தடுப்பதற்கு தம்பி படாதபாடு பட்டு முடிவில் வெற்றி பெறுகிறான். கதையில் புதுமை இருக்கிறது, காட்சியமைப்பில் விறுவிறுப்புத் தென்படுகிறது.

'மாகீர்த்தி'யாக வரும் கதாபாத்திரம் பயங்கரமானதாக இருந்தாலும் படிப்பவர்களின் மனதைவிட்டு அகலாத வகையில் ஆசிரியர் அந்தப் பாத்திரத்தை உருவாக்கியிருக்கிறார். நாடகத்தைப் படித்து முடித்த பிறகு ஒரு கணம் யோசித்தால், ஆசிரியர் வில்லனுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதாகவே படுகிறது. அழிந்து போன சர்வாதிகாரிகளின் தத்துவங்கள் நாடகத்தில் ஆங்காங்கே தூவி விடப்பட்டிருக்கின்றன.

நல்ல கதையமைப்பும், அழகான சொற்கோவையும் நாடகத்தில் காணப்படும் சிறு குறைகளை மறைத்துவிடுகின்றன.

எழுதியவர் :

எஸ். எஸ். தென்னரசு
விலை ரூ. 1-4-0

வெளியிட்டோர் :

**மலர் நிலையம்,**
133. பிராட்வே, சென்னை 1.

★

### மக்களாட்சி

தி. மு. கழகத்தின் கொள்கைகளைத் தாங்கி வெளிவரும் திங்களிருமுறை இதழ். ஆசிரியர் இளமுருகு பொற்செல்வி. இனிய எளிய தமிழ்நடையில்சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளையும், அரசாங்கத்தின் நிர்வாக ஊழல்களையும் 'மக்களாட்சி' மக்களுக்கு எடுத்து விளக்குகிறது.

**மக்களாட்சி**
ஆண்டுச் சந்தா ரூ. 3-0-0
தனி இதழ் அணா. 2.

**முகவரி :**
32, மேலப்புலிவார் தெரு,
திருச்சி.

★

### பேசும் படம்

'பேசும் படம்' ஆண்டு மலர் கிடைக்கப்பெற்றோம். அதிகப் பக்கங்களோடு, ஏராளமான வர்ணப் படங்களுடன், கண் கவரும் வனப்பினதாய் மலர் அமைந்திருக்கிறது. சுவை மிகுந்த அம்சங்கள் மலரில் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு பேசும்படம் ஆண்டு மலர், கலாரசிகர்கள் போற்றிப் பாதுகாக்க வேண்டிய நூலாகும். விலை ரூ. 1-8-0.

---

### திருமணம்

5-4-57 வெள்ளி மாலை திருக்கோட்டியூர் தி. மு. கழக உறுப்பினர் பெ. அய்யாச்சாமிக்கும் ஆத்தங்குடி திருமதி லெட்சுமிக்கும் திருக்கோட்டியூரில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது, கழக நண்பர்களும் உறவினர்களும் விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

---

## ஆசிரியத் தோழருக்கு

— இராசன் —

## வங்கத்து முடங்கல்

அன்புள்ள ஆசிரியர்,

அவர்களுக்கு வணக்கம். நான் ஒரு திராவிடன். ஆனால் வடவர் மததியிலிருந்து உங்களுக்கு மடல் தீட்டுகிறேன் என்பதால் பேராச்சர்யம் உண்டாகலாம். உங்களுக்கும் எனக்கும் மடல் எழுதவேண்டிய காரணங்கள் கிடையா! எனினும் வரைகிறேன் என் மனவேதனையை விளக்க. தாயகம்விட்டு வேறகம் புகுந்து 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற காரணத்தால் துன்பப்பட வேண்டியிருக்கிறதே என்பதற்காக நான் இதை எழுதவில்லை. 'ஏகஇந்தியா' தத்துவம் பேசும் எத்தர்களுக்கு எங்கே இருக்கிறது ஏகஇந்தியா என்பதைக் காட்ட இங்கே பழகி, நடை, உடைபாவனைகளை முழுதும் அறிந்து எழுதுகிறேன். ஒருவேளை நான் 'கழகத்தான்' என எண்ண இடமுண்டு. அவ்வாறு இல்லை. நான் "உயர் குலப்பிறப்பு! பார்ப்பனன்" என்று கூறும் வகுப்பிடை பிறந்தவன். வறுமையின் காரணமாக, தாயகத்தில் வேலையின்மையின் நிலையால் இங்குவந்து ரயில்வே குமாஸ்தாவாக ஊழியம் புரிகிறேன்; நான் இங்குவந்து ஒருவாரம் ஆகின்றது. என்னைப் போன்ற இளைஞர்களும் வயதானவர்களும் வேதனையுடன் வாழ்கின்றனர்.

நிற்க!

நான் இங்கு வந்தவுடன் என்னுடன் ஒரு வங்காளி நண்பர் உறவு (நட்பு) கொண்டார். அவர் என்னை எந்த ஊர் என்றார் ஆங்கிலத்தில். (எனக்கு இந்தி, வங்காளி ஒன்றும் தெரியாது) முதலில் திராவிட நாடு என்றேன். அவர் திகைத்தார்! நான் வணக்கமாக 'ஜனகண மன' என்ற தாகூரின் பாடலைக் கூறினேன். அதன் பிறகு உணர்ந்த அவர் 'தென் இந்தியாவா' என்றார் ஆம்! நான் தமிழன் பிறப்பால், மொழியால், என்றேன். மிக்க மகிழ்ச்சி என்றவர் உங்கள் நாட்டில் 'கசகம்' (கழகம் என்பதை அழகுடன் உச்சரிக்கிறார்) 'கசகம்' இருக்கிறதாமே என்றார். ஆமாம் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்றேன். தனிப்பட்ட முறையில் கழகத்தைப் பற்றிக் குறிப்பாக ஏன் கேட்டார் என்று விளங்கவில்லை. அதன் பிறகு உங்கள் நாட்டில் பார்க்க வேண்டியவை என்ன? என்று ஒரு பெரிய, வேதனையான கேள்வியை எழுப்பினார்! தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த வங்காளியாயினும் சங்க காலத்தைக் காட்டுவேன். என்ன இருக்கிறது நான் செப்ப? இருந்தாலும்மகாபலிபுரம் தஞ்சைப் பெரிய கோயில், சிதம்பரம், சீரங்கம், மீனாட்சியம்மை, இப்படி அடுக்கினேன். கடைசியில் குமரிமுனை, மெரினா பீச் என்றேன். அவர் அவற்றை எல்லாம் சாவதானமாகக் கேட்டுவிட்டு "எங்கள் நாட்டில் நீங்கள் எங்கு நோக்கினும் ஆலைகள் காண்பீர்கள் என்றார்! நினைத்துப் பாருங்கள்! அந்தச் சொல்லோவியம் எத்தகைய தீய ஆயுதமாக என்னைத் தாக்கியிருக்கும் என்று. என்னை மட்டுமல்ல, தன்மானம் கொண்ட அத்தைய எல்லோரையும் அது தாக்கத்தான் செய்யும். அவர் கூறும் முன்னம் நானே வங்காளத்தின் தொழிற் துறைகளை அடுக்கினேன்...! உண்மையிலேயே எனக்கு நெஞ்சை அடைத்துவிட்டது. சிந்தரியாம்! சித்தரஞ்சனும்!! அதுபோன்று நமது நாட்டில்ஏன் இல்லை! ஏன் இல்லை!! ஏன்!!

பாரதியைப் பற்றிக் கூறினேன். யாது...! என்கின்றனர். வ. உ. சியைப் பற்றி புகழ்ந்தேன் யார் அவன்? என்கின்றனர். திருவள்ளுவர்! தெரியாதே என்கின்றனர். நமது நாட்டில் ஐந்தாம் வகுப்பிலேயே தாகூர் பற்றி அறிகிறோம் டாடா பற்றி படிக்கிறோம்.! தாமோதர், அசன்சால், சிந்திரி, சித்தரஞ்சன் பற்றித்தெரியவருகிறோம். சொல்லப்போனால் வடக்கைப் பற்றி வடவரைவிடப் பூரணமாக அறிகிறோம். நமது அரசாங்கம் அறியவைக்கிறது. இளங்கோவிற்கு முன்னால் கபீர்தாஸ்! வள்ளுவனுக்கு முன்னால் தாகூர்! இளங்கோ எங்கே! கபீர்தாஸ் எங்கே! தாகூர் எங்கே! வள்ளுவர் எங்கே! வடவர் மத்தியில் நாம் நமது செல்வம், கலை, இலக்கியம்......அறிவுச்செல்வம் யாவும் இருட்டடிப்பு செய்யப்படுகின்றன. இங்கு அலுவலர்கள் யாவரும் வங்காளத்திலேயே மொழிகின்றனர். வங்காளம் இந்தி தெரியாத நபர்களிடமும் கட்டாயமாக வங்காளம், இந்தி பேசுகின்றனர்.

தயவுசெய்து ஏகஇந்திய தாசர்கள் ஒருகணம் சிந்தியுங்கள் எந்த நாடு முன்னேறுகிறது? எங்கே வாழ்வு! எங்கே தாழ்வு! ஒரு நாட்டின் வளம் கோயில்களைக் காண்பிப்பதிலா புதைந்து கிடக்கிறது? தஞ்சைப் பெரிய கோயில் உண்டு என்றால் நாம் பஞ்சைகள் அல்ல என்பதா பொருள். தாழ்ந்த திராவிடமே நீ வீழ்ந்துவிட்ட அவலநிலை தாசர்களின் கண்களுக்கு ஏன்? புலனாகவில்லை, நீதிகூறுமின்! இங்கே வாழும் அத்தனை பார்ப்பனரும் அழுது புலம்புகின்றனர் ஆதரவளிக்க அனுதாபம் காட்ட மறுக்கும் அன்னை நாட்டை எண்ணி.

அன்புள்ள
வங்கம் வாழ் தமிழன்.

# பரிசுப் புடவை

ப.வாணன்

(2)

நான் மரியாதையாக வணக்கம் கூறினேன். கடைக்குள்ளே போய் ஏதோ துணிகள் எடுத்தார்கள். சில நிமிஷங்களில் திரும்பவந்து பணம் செலுத்தி விட்டு, விடை பெற்றுக் கொண்டு போயினர், அந்த தம்பதிகள். ஆனல் எங்கள் கடையை விட்டு போகிறவரை அந்த ஆரணங்கின் ஒரக் கண்கள் என்னை விட்டு அகலவில்லை. என்னுலும் பார்க்காமலிருக்க முடியவில்லை!

மறுநாள் காலை அவரே என் அறைக்கு வந்தார்.

"என் பெயர், தனபால். ரெக்கார்டு ஆபிசிலே கிளார்க், சார்!" என்று தன்னையே அறிமுகப் படுத்திக் கொண்டார். நானும் சிரித்துக் கொண்டே, "உட்காருங்கள்! சென்னைக்குப் புதிது போலிருக்கு? என் பெயர் கோமதிநாயகம்!" என்றேன்.

"ஆமாம்...சென்னைக்குப் புதிது தான். இதற்குமுன் பெல்லாரியிலிருந்தேன்! இங்கு வேலை கிடைத்தது. வந்துவிட்டேன்!" என்ருர். பிறகு சம்பாஷணை வளர்ந்தது. நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தோம். அறைக்கு வெளியே யாரோ நிற்பதுபோல் தோன்றியது. எட்டிப்பார்த்தேன். அவள் நின்றுகொண்டிருந்தாள்! அதே பார்வை ...நெஞ்சை அபகரிக்கும் பார்வை!

"சார், உங்கள் வீட்டில்..." என்று இழுத்தேன்.

"ஓ, சக்குவா.. ...இதோ வருகிறேன்!" என்று கூறிக்கொண்டே போய்விட்டார்.

பிறகு சில நாட்களில் தனபால் என் இரவு நேரங்களை அபகரிப்பதில் தவறுவதில்லை. கடையை மூடிக்கொண்டு இரவு எட்டு மணிக்கு நான் அறைக்குப் போவேன். பையன் சாப்பாடு கொண்டு வந்து வைத்திருப்பான். அதை எடுத்துக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தால், சில வினுடிகளில் அறைக்கதவை தட்டும் சப்தம் கேட்கும். போய்ப் பார்த்தால், கையில் ஒரு கிண்ணத்துடன் தனபால் நின்றுகொண்டிருப்பார்.

"கொஞ்சம் கத்தரிக்காய் சொஸ்து, சார்! நம்ப சம்சாரத்தோட, கை விசேஷத்தையும் பாருங்கள்!" என்று நகைச்சுவையோடு ஒரு கிண்ணத்தை கொடுத்துவிட்டுப் போய்விடுவார். இப்படி இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளேயே அவர் எனக்கு நெருங்கியவராகி விட்டார்.

வெகு விரைவில் தன் குடும்ப விஷயங்களைக்கூட அவர் சொல்ல ஆரம்பித்துவிட்டார். அவர் சக்குவியமாக ஏதாவது கூறினுல் அதை கவனமாகக் கேட்பேன். மற்றவைகளில் எனக்கெப்படி அக்கறை தோன்றமுடியும்? கொஞ்சம் பழகிய பிறகு எனக்கு ஒரு தெளிவான எண்ணம் கிடைத்தது. இப்பொழுதெல்லாம் சக்குவைப் பார்த்தால் அந்த அபரிமிதமான உணர்ச்சியும் ஏற்படுவதில்லை. நாள்தோறும் கடையில் வரும் ஆயிரக்கணக்கான பெண்களைப்போல அவளையும் ஒருத்தியாக நினைக்க ஆரம்பித்தேன்.

தீபாவளி சீசன் வந்தது. ஜவுளிக் கடையில் தீபாவளி வியாபாரத்தை கேட்கவேண்டுமா? இரவு ஒரு மணிக்குத்தான் அறைக்குப் படுக்க வருவேன். இப்படி ஒருநாள் படுக்க வரும்போது பத்தாம் நம்பர் அறையில் லேசாக அழுகுரல் கேட்டது. கட்டிடமே நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது தனபால் அறையில் அழுகுரல் கேட்டதால் எனக்கு கொஞ்சம் திகைப்பும் சந்தேகமும் ஏற்பட்டது. மெதுவாக அவர் அறைக்கு அருகில் போய் கதவோடு காது வைத்துக் கேட்டேன். உள்ளே, சக்குவேதான் அழுதுகொண்டிருந்தாள். அழுவதோடு கோபமாகப் பேசிக்கொண்டிருந்தாள்...

"தீபாவளியும், அதுவுமா.. நாலு பேர் என்ன நினைப்பா...எனக்கு ஒரு புடவை வேணுமென்ருல் உங்களுக்கு எல்லா செலவும் வந்துடும்..." என்ற சொற்கள் அரைகுறையாக காதில் விழுந்தன.

அதற்கு மேலும் கணவன் — மனைவி சம்பாஷணையைக் கேட்பது சரியில்லை என்று என் அறைக்குப் போய் விட்டேன்.

மறுநாள் காலை தனபால் முகவாட்டத்தோடு என் அறைக்கு வந்தார்:

"என்ன, சார்! முகம் வாட்டமாயிருக்கிறதே?"

"ஹி... ஹி... ஒன்றுமில்லை. இரவு தூக்கமே இல்லை... ஒரே கொசு!"

"கொசுவா... என் அறையில் ஒரு கொசு கிடையாது...... கடற்காற்று ஜில்லென்று வீசுகிறது!"

"ஹும்...நீங்கள் பிரம்மாச்சாரி... கொசு ஏன் உங்களிடம் வரப் போகிறது!" என்ருர் அசட்டுச் சிரிப்புடன்.

"அது கிடக்கட்டும்..தீபாவளிக்கு துணிகள் எடுத்தாகி விட்டதா?"

"ஹிம்...எடுக்கணும்..."

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள். மாலை எங்கள் கடைக்கு வாருங்கள் புதுப்புதுச் சரக்கு வந்திருக்கிறது, சார்! நல்ல பட்டுப் புடவையெல்லாம் வந்திருக்கிறது..."

"பட்டாவது...... புடவையாவது. பணம் கொடுத்துத்தானே எடுக்க வேண்டும்?"

"சம்பளம் வாங்கி கொடுத்தால் போச்சு!"

"பட்டுப்புடவை வாங்குகிற அளவா சம்பளம் கொடுக்கிருர்கள்?"

"மாதம் கொஞ்சமா, கொடுத்தால் போச்சு!"

இப்படி ஒரு அனுவசிய ஒப்பந்தத்தை ஏன் செய்துகொண்டேனென்று, எனக்கே தெரியவில்லை.

அன்று மாலையே தனபாலும், சக்குவும் எங்கள் கடைக்கு வந்தனர். நானே போய் புடவைகளை எடுத்துக் காண்பித்தேன். 'காஞ்சீபுரமா, பெங்களூரா, பெனுரஸா?' என்று கேட்டுக் கொண்டே ஒவ்வொன்ருகக் காண்பித்தேன். தனபால் புடவையை விட, புடவையின் விலையைத்தான் திரும்ப, திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தார்!

அவள் பெனுரஸ் புடவையொன்றை ஆவலோடு எடுத்தாள். தனபால் பெங்களூர் புடவை ஒன்றை விலை மலிவோடு பார்த்தார்!

தம்பதிகளின் தர்க்கத்தினிடையே நாமிருக்கக் கூடாது என்று நான் விலகி விட்டேன். முடிவில் தனபால் எடுத்தது தான் திகைந்தது. சக்குவின் ஏமாற்றத்தைஅவள் முகம் வெகு தெளிவாகக் காண்பித்தது. அந்த அழகிய முகத்தில் கவலை தோய்ந்து நின்றது, எனக்கு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. அவள் சிரிக்கும் பொழுது எவ்வளவு நன்ருக இருக்கும் தெரியுமா?

"ஏன் சார், பெனுரஸ் வேண்டாமா?" என்ருர், அவளை பார்த்துக் கொண்டே.

பெனுரஸுக்கும், பெங்களூருக்கும் ரூ. 50 முழுசா வித்தியாசம்! அவர் தன்னை அதிகமாக கடனுளியாக்கிக் கொள்ள விரும்பவில்லை!

தீபாவளிக்கு இன்னும் ஒருவாரம் இருந்தது. அந்த ஏழு நாட்களுக்குள் என் மனதில் சக்குவின் ஏமாற்ற முகம் வினுடிக்கொரு தடவை தோன்றி மறைந்துகொண்டிருந்தது. யாரோ, ஒருவரின் மனைவி. அவள் சிரித்த முகத்தோடு இருந்தால் என்ன; அழுத மூஞ்சியோடு இருந்தால் என்ன? நான் ஏன் அதைப் பற்றி மனதை வருத்திக்கொள்ள வேண்டும்.

அன்றிரவு அந்த பெனுரஸ் புடவையை என் அறைக்கு எடுத்து வந்துவிட்டேன். விலையைப் பார்த்தேன். ரூ. 20 என்று போடப்பட்டிருந்தது. புடவை நல்ல கருப்பு. முசப்பில் சிகப்பும், பார்டரில் கை யகலம் ஜரிகையும் இருந்தது. ஆம்! அவள் கட்டினுல் நிச்சயம் இன்னொரு மடங்கு அழகாக இருப்பாள்.. .அன்று அவர் ஆபிஸுக்குப் போயிருப்பார் என்று எனக்குத் தெரியாது. இன்னும் ஒன்பதுமணி கூட ஆகவில்லை. கையில் புடவையை எடுத்துக்கொண்டு அவர் அறைக்குச் சென்று மெதுவாகத் தட்டினேன். அவர் இல்லை... அவள்தான் திறந்தாள்!

வீட்டிற்குள் இருப்பதினுல், அவள்மேல் உடை மிகக் குலைந்திருந்தது. தலை கலைந்திருந்தது. வயிற்கு இருக்கவேண்டியதைவிட அதிகமாக இருந்த மார்பகங்கள் அந்த நிலையிலும் நிமிர்ந்து நின்றன! அவள் கோலத்தைக் கண்டு திடுக்கிட்டு நான் திரும்பினேன். அவளும் அவசரம், அவசரமாக சேலையை சரி செய்துகொண்டே, 'இப்பொழுதுதான் ஆபீஸுற்குப் போனுர்...'' என்ருள்.

"பரவாயில்லை..."

"ஏன், என்ன விசேஷம்?"

"இல்லை.. இந்த பெனுரஸ் புடவையை கொடுத்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்..."

"பெனுரஸ் புடவையா...? அவர் கொண்டுவரச் சொன்னுரா? உள்ளே வாருங்கள்.....வெளியே நின்றுகொண்டு பேசுகிறீர்களே!

நான் உள்ளே போனேன்.

(தொடரும்)



கழகம் தேர்தலில் நின்றாலும் நின்றது குருடர்களெல்லாம் கண் திறந்து பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். தொன்னையிலே வெண்ணையை வைத்துச் சூரிக் கத்தியால் வெட்டும் வீராதி வீரர்களெல்லாம் மூலைக்கு மூலை முழங்கினார்கள்; முழங்குகிறார்கள்; எழுதினார்கள்; எழுதுகிறார்கள். எத்தனை ரகங்கள் இப்படிக் குதிக்கின்றன என்று கணக்கெடுப்பதிலே எனக்கொரு உற்சாகம்.

காங்கிரஸ் வியாபாரிகள் ஒரு ரகம்-இதுகுட்டியாயிருந்தபோது குதிரை மாதிரி இருந்து வயசு வந்தபோது உருவம் மாறிய ரகம்.

கம்யூனிஸ்டுகள் ஒரு ரகம்-இது மாஸ்கோவிலிருந்து வந்து வியாபாரம் ஆகாமல் தேங்கிக் கிடக்கும் ரகம்.

சோஷலிஸ்டுகள் ஒரு ரகம் - இது கம்யூனிசத்தில் உளுத்துப் போய் மலிவு விலையில் கடைக்கு வந்திருக்கும் ரகம்.

தமிழரசுக் கழகம் ஒரு ரகம்-இது வழுக்கைத்தலையில் ரோமம் முளைத்த மாதிரி அங்கொன்று இங்கொன்றாக 'அவுட்' அடிக்கும் ரகம்.

-இந்த ரகங்கள் எல்லாவற்றிற்குமே முன்னேற்றக் கழகத்தைக் கண்டால்தான் ஆகாது. இதோடு திராவிடர் கழகம் தனி ரகம்; தினசரி உருமாறும் ரகம். நிற்க;

இப்போது ஒவ்வொரு ரகமாகக் கவனிப்போம்.

இதோ காங்கிரஸ் ரகத்திலே காமராசர் முழங்கப் போகிறார். நெஞ்சிலே நூறு நினைக்கிறார். அம்பது முழுசாகத் தொண்டைக்கு வருகிறது. அதில் இருபத்தைந்து தொண்டையிலேயே கரைந்து, இருபத்தைந்து மட்டும் நாக்குக்கு வருகிறது. அதில் பதினைந்து நாக்கிலேயே குழம்பி பத்துமட்டும் உதட்டுக்கு வருகிறது. உதட்டில் ஒட்டிக்கொண்டது ஐந்து போக ஐந்துமட்டும் வெளியிலே வருகிறது. அதற்குள் காமராசருக்கு வியர்க்கிறது. மேனி ஆடுகிறது. கால்கள் தந்தியடிக்கின்றன. கண்கள் சொருகுகின்றன. நாக்கு வரளுகிறது. 'ஆகையால் மகாஜனங்களே மாட்டுக்கு ஓட்டுப் போடுங்கள்' என்று முடிக்கிறார். காமராசருக்கு மேடையிலே நேர்ந்த இந்த விபத்தைக் கேட்டு தோழர் ஈ. வெ. ரா. வெது வேகமாக ஓடி வருகிறார். காமராசரை இடுப்பிலே தூக்கி வைத்துக் கொண்டு தொண்டையைத் தடவிக் கொடுக்கிறார். உடனே காமராசர் மீண்டும் முழங்குகிறார். கூடியிருக்கும் ஏழுபேரும் கைதட்டுகிறார்கள். 'காங்கிரசை யாரும் அசைக்க முடியாது' என்கிறார். அவர் உடம்பு அசைந்து ஆடி விழுந்துவிடாமல் தோழர் ஈ. வெ. ரா. கவனித்துக் கொள்கிறார். கடைசியில் இருவரும் கண் விழித்துப் பார்க்கும்போது மேடைக்கு முன்னாலே சில ஆடுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன.

மறுநாள் பெரிய பரபரப்பு. பத்திரிகைகளில் ஏழு காலம் தலைப்பு. உலகம் கூர்ந்து கவனிக்கிறது. ஆகா! எகிப்திலே பிரமிட் அதபுதமென்கிறார்கள் சிலர். காமராசரே பேசியிருக்கிறார். அவர் பேசியதை விடவா அது அற்புதம்?

—இப்படி உலக மகாஜனங்கள் ஆச்சரியத்தில் முழுகுகிறார்கள்.

இதோ ரஷ்யக் குமாஸ்தா ஜீவானந்தம் முழங்குகிறார்.

'திராவிட முன்னேற்றக் கழகத்தை ஓட ஓட விரட்டுங்கள்' என்கிறார். இப்போது சிலபேர் வேகமாக ஓடி வருகிறார்கள். தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கம்யூனிஸ்டுகள் தலைதெறிக்க ஓடி வருவதாகவும், இவர்களெல்லாம் கருங்கடலில் விழுவதா, செங்கடலில் விழுவதா என்றும் கேள்வி கேட்கிறார்கள். 'கருங்கடலில் விழுங்கள்' என்று தவறிக் கூறிவிட்ட ஜீவானந்தம் உடனே பிரம்மை நீங்குகிறார். 'இல்லை! இல்லை! நாம் உயிர்பிழைத்த ஒரே இடமான கேரளாவுக்கு ஓடுங்கள். சீக்கிரம் திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் ஏறுங்கள்'' என்று அபயம் தருகிறார். இறுதியில் தானும் கையில் ஒரு பையைத் தூக்கிக்கொண்டு எக்ஸ்பிரஸ் வண்டிக்குள் நுழைகிறார்.

ஆகா! இவர்தான் சோஷலிஸ்டுப் பேச்சாளர். இவர் தானாக மேடையேறுகிறார். தானாக முழங்குகிறார். தானாக முடிக்கிறார். தானாகப் போய்த் தூங்குகிறார். இவர் உலகத்தை லட்சியம் செய்வதுமில்லை. உலகம் இவரை லட்சியம் செய்வதுமில்லை.

அடுத்த ரகம்தான் அபூர்வ ரகம். இந்த ரகம் பேசும்போது கேட்டால் திராவிட முன்னேற்றக் கழக மேடைபோலவே இருக்கிறது. கழகம், மாநிலம், மாவட்டம், பொதுச்செயலாளர், மாவட்ட மாநாடு,மாநில மாநாடு, தலைமை நிலையத்திற்குக் கட்டிடம், இலக்கியம், வரலாறு-இப்படிப்பட்ட வார்த்தைகளெல்லாம் அப்படியே 'கார்பன்'காப்பி எடுத்து முழங்கப்படுகின்றன இந்த மேடையில்! 1955 ம் வருடம் ஜுலை மாதம் அண்ணா ஒரு பேச்சுப் பேசியிருக்கிறாரென்றால், 1956ம் வருடம் ஜுலை மாதம் அதே தேதியில் சில பல மாற்றங்களோடு அதே பேச்சை இந்த ரகத்து மேடையில் கேட்கலாம். நமக்குக்கூட அவ்வளவு ஞாபகசக்தி இல்லை. ம. பொ. சி. எப்படித்தான் அண்ணாவின் பேச்சை 'நெட்டுரு'ப் பண்ணுகிறாரோ தெரியவில்லை. அப்படி அப்படியே பேசுகிறார். இதைக் கவனிக்கும்போது தான், ஏகலைவன் கதையொன்றும்(!) பொய்யல்ல என்று தோன்றுகிறது. [அதற்காக அண்ணா ஒன்றும் கட்டைவிரலைக் காணிக்கையாகக் கேட்கப்போவதில்லை.] இனி, அண்ணாவின் பேச்சை டேப் ரிகார்டு எடுத்து தோழர் ம. பொ. சி. க்கு அனுப்பிவைப்பது நாம் அவரது எதிர்காலத்திற்குச் செய்யும் பேருதவியாகும். அவர் நம்மைத் திட்டினாலும், நாமே நம்மைத் திட்டிக் கொள்வதுபோலத் தானே இருக்கிறது. ஏனென்றால் அவ்வளவு வார்த்தைகளும் நம்முடைய வார்த்தைகள்தானே!

# "தென்றல்"
## தனி இதழ்
## 13
## புதிய காசு

பத்து வருஷங்களுக்கு முன்னால் பரிதாபத்திற்குரிய ம.பொ. சி. யின் தமிழரசுக் கழகத்திலிருந்த கொ. மொ. ஜனார்த்தனம் என்பவர் ம. பொ. சி. யின் பரிதாப நிலையைப் பற்றி ஒருவருக்கு தினசரி கடிதமெழுதுவார். அவர் வழக்கத்தை மீறி அந்தக் கடிதங்களை மட்டும் பத்திரமாக வைத்திருக்கிறார். அந்தக் கடிதங்களை நீங்கள் பார்த்தால் அநாதையாகத் தெருவில் நிற்கும் அவருக்கு துணைக்கு யாராவது கிடைக்கமாட்டார்களா என்று தோன்றும். கழகத்திற்கு ஒரு உறுப்பினர் சேர்க்க யாருடைய காலையும் பிடிப்பதற்குக்கூடத் தயாராக இருந்தார்கள். ஐயோ பாவம்! மூவர்ணக் கொடி போட்ட 'லெட்டர் பேப்பர் அதன்மேல்', தமிழரசுக்கழகம் லிங்கி செட்டி தெரு, - என்ற விலாசம். எவருக்கும் புரியாத மொழியில் கொள்கை விளக்கம். அது மட்டுமா? இப்போது அரசியல் தர்மமும், நெறியும் போதிக்கவரும் தோழர் ம. பொ. சி. யின் அந்நாளைய அரசியல் தர்மத்தைப் பற்றி 'தமிழ்முரசு' கோவிந்தனின் சாட்சியத்தையும் கொஞ்சம் கேட்போம்:

[''இவ்வளவும் கூறக் காரணம் குறைகூறும் நோக்கன்று. தா... மேலும் வளர்வதற்கு த... உண்மை நிலையை... உணர்ந்து கொள்ள வேண்டுமென்ப... தான்.''-'செங்கோல்'31-3-5...

-வணங்காமு...

# தி. மு. க.
## பொதுக்குழுக் கூட்டம்

14-4-57 ஞாயிறு அன்று திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த குளித்தலையில் நடைபெறும்.

சென்னை, "அறிவகம்"
1—4—57.

—தி. மு. க.
தலைமைக் கழகம்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்...